1973 மார்ச் 2]

பால் விற்பனை விலை

*219 வினு—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பிற மாவட்டங்களில் பால் விலையை அரசு நிர்ணயித்திருப்பது போல தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலும் பால் விலையை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருச்சி, ஸ்ரீரங்கம், பால்வழங்கு மத்தியக் கூட்டுறவுச் சங்கம், தஞ்சாவூர் மாவட்டம் கூட்டுறவுப் பால் உற்பத்தி விற்பனைக் கூட்டமைப்பு ஆகியவைகளிடமிருந்து வாங்கும் பாலுக்கான விலையை ஏற்கெனவே பால் உற்பத்தி-பாற்பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளர் 1969 டிசம்பரில் நிர்ணயித்துள்ளார். அதன்படி அச்சங்கங்களிடமிருந்து வாங்கும் பாலுக்குப் பணம் வழங்கப்படுகிறது. இவ்விலை விதங்கள் நியாயமானவை எனத் தெரிவதால் இந்த இரு மாவட்டங்களில் பால் விலையை மாற்றி அமைக்க வேண்டிய தேவையில்லை. ஏனைய மாவட்டங்களில் சேகரிக்கப்படும் பாலுக்கான கொள்முதல் விலையை மாற்றியமைப்பது குறித்து தமிழ் நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தனியார் நடத்தும் பால் பண்ணைகளுக்கும், கூட்டுறவுத் துறையின் மூலம் நடைபெறும் பால் பண்ணைகளுக்கும் பால் விலையில் வித்தியாசம் உள்ள காரணத்தினல் பால் விலையை நிர்ணயிப்பதை அரசாங்கமே மேற்கொண்டு செய்யும் முயற்சியை விரைவில் அறிவிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சென்னையிலே உள்ள பால் பண்ணைக்கும், மதுரையிலுள்ள பால் பண்ணைகளிலிருந்து வாங்கும் பாலுக்கும், கூட்டுறவுச் சங்கங்களாகயிருந்தாலும், தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குவதாகயிருந்தாலும் நாம் பால் விலையை நிர்ணயம் செய்கிறோம். தரத்தின் அடிப்படையில் பால் விலை நிர்ணயிக்கப்படுகிறது. 1969-ஆம் வருஷம் இந்தப் பால் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்ற முறையை ஏற்று, 15—8—71-ஆம் தேதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட பால் விலை மற்ற மாவட்டங்களிலே விலையைச் சற்று உயர்த்தியிருக்கிறோம். ஆனால் தஞ்சை, திருச்சியிலே ஏற்கனவே வழங்கப்பட்ட விலை இந்த விலையோடு ஒத்து வருவதால் இந்த விலை உயர்த்தப்படவில்லை.

[1973 மார்ச் 2

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, 69-ஆம் வருஷத்து அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்பொழுது சென்னைத் திட்டத்திற்குப் பலயிடங்களிலிருந்து பால் வருகிறது. இப்பொழுது லிட்டர் 90 பைசாவிற்கு விற்கப்படுகிறது. ஆனால் சமீபத்தில் மாட்டுத் தீவனங்களான பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை முதலியவை 100 சதவிகிதம் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, பால் விலை கட்டுப்படியாகாமல், குறைந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பால் உற்பத்தி குறையக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, மற்றப் பொருள்களின் விலையை அனுசரித்து பால் விலையை உயர்த்துவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாக வேண்டும், பால் வழங்குபவர்களுக்குக் கட்டுப்படியாக வேண்டும் என்று உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதை உயர்த்தும் நேரத்தில் பால் வாங்க முடியாத நிலையில் விலையை உயர்த்திவிட்டார்கள் என்ற பிரச்னை எழும். ஆகவே இவைகளை இணைத்துத்தான், இரண்டு வழிகளிலும் யோசனை செய்து விலையை நிர்ணயம் செய்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களிலேயிருக்கும் நிலையைவிட திருச்சி மாவட்டத்திலே பால் விநியோகம் குறைவாக இருக்கிறது. இதைப் பெருக்குவதற்காக நல்ல நாணயமுள்ளவர்களுக்கு மாடுகளை இலவசமாக வாங்கிக் கொடுத்து வட்டங்கள்தோறும் பால் சேகரிக்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இலவசமாக வழங்குவது என்பது இயலாத காரியம். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு எந்தெந்த வகையிலே அரசு அதிகமாக மானியம் கொடுத்து பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the recent increase in the price of milk and also increase in the price of fodder which is almost 70 per cent to 80 per cent, will the Government consider it necessary to control fodder price so that the milk price will not go up?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, பாலுக்கு விலை நிர்ணயம் செய்வதைப்பற்றித்தான் இப்பொழுது சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தீவன உற்பத்தியாக இருந்தாலும், மாடுகளைப் பராமரிக்கும் சாதனங்

ளாகயிருந்தாலும் விலை உயர்த்தப்பட்டிருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் சிரமப்படுகிறார்கள் என்பதைப் பரிசிலித்த பிறகு கடந்த ஐந்து மாத காலத்திற்கு முன் பால் விலையை உயர்த்தியிருக்கிறோம்.

DR. H. V. HANDE : Will the Government give plastic bottles. . . .

MR. DEPUTY SPEAKER : That is the next question.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று அரசு அக்கறை கொண்டிருந்தாலும் மாட்டுத் தீவனம் என்று சொல்லப்படும் பருத்திக் கொட்டையை அதிக விலை கொடுத்து சோப்பு செய்யும் பேக்டரிகள் முழுவதுமாக வாங்கி விடுகிறார்கள். பருத்திக்கொட்டை மாடுகளுக்கு அத்தியாவசியமான தேவை. அதை வாங்க முடியாமல் இருப்பதைத் தடுக்க அரசாங்கம் பருத்திக் கொட்டை விலையைக் குறைப்பதற்கோ அல்லது இம்மாதிரி பேக்டரிகள் வாங்குவதைத் தடுப்பதற்கோ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாயூரம் நகரில் தனியார் நடத்தும் பால்பண்ணைகளில் லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாயும், அதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் நடத்தும் பால் பண்ணைகளில் லிட்டர் ஒன்றுக்கு 85 காசுக்கும் வழங்கப்படுகிறது. இதைச் சரிசெய்து கூட்டுறவுத் துறைக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் இதை மாற்றியமைத்திட, சரி செய்திட அரசு ஆலோசனை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தி விற்பனைக் கூட்டமைப்பின் சார்பில் உற்பத்தியான பாலை நாம் வாங்குகிறோம். தனியார் வெளியில் விற்கும் நிலைமைகளை வைத்து கூட்டமைப்பின்மூலம் விலை நிர்ணயம் செய்ய முடியாது.

Supply of milk in plastic containers

* 220 Q.—THIRU S SANGUMUTHU THEVAR : Will the Hon the Minister for Religious Endowments be pleased to state :—

(a) whether there are proposals under the consideration of the Government to replace the bottles with plastic bags for milk distribution by the Tamil Nadu Dairy Development Corporation; and

(b) if so, the details thereof?